# வெகுசன ஊடக அமைச்சு
# ஏற்பாடு செய்யும்

## 2024 சர்வதேச தகவல் அறியும் உரிமை தொடர்பான தினத்திற்கு இணைவாக நடாத்தப்படும் நாடளாவிய ரீதியிலான பாடசாலை மற்றும் திறந்த சுவரொட்டி சித்திரப் போட்டி – 2024

**பிரிவு**

1. சிரேஷ்ட பிரிவு - 12, 13 தரங்கள்
2. கனிஷ்ட பிரிவு - 9, 10, 11 தரங்கள்
3. திறந்த பிரிவு - எந்தவொரு இலங்கைப் பிரஜையும் ஆக்கத்தைச் சமர்ப்பிக்கலாம்.

**போட்டி நிபந்தனைகள்**

1. விண்ணப்பப் படிவத்தை கீழே தரப்பட்டுள்ள இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பாடசாலைப் பிரிவின் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சுவரொட்டி சித்திரம் கல்லூரியின் அதிபரினால் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
3. திறந்த பிரிவின் ஆக்கம் ஆக்கவியலாளரினால் தமது ஆக்கமென உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.
4. சகல ஆக்கங்களையும் பதிவுத் தபாலில் ''மேலதிக செயலாளர் (அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் தகவல்), வெகுசன ஊடக அமைச்சு, 163, அசிதிசி, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு -05'' எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
5. சகல சுவரொட்டி சித்திரத்திற்காகவும் 18x24 அளவான தாளைப் பயன்படுத்துதல் வேண்டும்.
6. சுவரொட்டி சித்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2024-08-20 ஆகும்.
7. எந்தவொரு மொழி மூலத்திலும் சுவரொட்டிச் சித்திரத்தைச் சமர்ப்பிக்கலாம்.
8. பாடசாலை விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாடசாலைப் பிரிவு - சுவரொட்டி சித்திரப் போட்டி - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. திறந்த விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திறந்த பிரிவு - சுவரொட்டி சித்திரப் போட்டி - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
10. தெரிவு செய்யப்படும் ஆக்கங்களின் உரிமையை வெகுசன ஊடக அமைச்சு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரிசு மற்றும் சான்றிதழ்கள்**

அகில இலங்கை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் 2024 செப்டெம்பர் 28ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச தகவலறியும் உரிமை தொடர்பான விழாவிற்கு இணைவாக கொழும்பில் வழங்கப்படும் என்பதுடன் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் அன்றைய தினம் பொதுமக்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

**சுவரொட்டி சித்திரப் போட்டி தலைப்புகள்**

1. தகவல் உரிமை பிரஜையொருவரை வலுவேற்றும்
2. தகவல் உரிமை என்பது ஜனநாயகத்தின் உயிர் நாடியாகும்
3. தகவல் உரிமை ஊடாக வினைத்திறனான அரச சேவையை நோக்கி
4. தகவல் உரிமையும் எமது கிராமத்தின் அபிவிருத்தியும்
5. தகவல் உரிமையின் பயன்பாடு நாட்டு மக்களுக்கே.

**செயலாளர்,**
**வெகுசன ஊடக அமைச்சு.**

**மேலதிக விபரங்கள்**
**வெகுசன ஊடக அமைச்சின் தகவலறியும் உரிமை தொடர்பான விசேடப் பிரிவு.**

**தொலைபேசி: 0112515700**
**இணையதளம்: www.rti.gov.lk மின்னஞ்சல்: rti@media.gov.lk/rtiunitsl@gmail.com**